# දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව
# உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
# INLAND REVENUE DEPARTMENT

ලේකම් අංශය
දේශීය ආදායම් ගොඩනැගිල්ල
ශ්‍රීමත් චිත්තම්පලම් ඒ ගාඩිනර් මාවත
තැ.පෙ. 515, කොළඹ 02
ශ්‍රී ලංකාව
දුරකථන :- 011-2334400/011-2135400
ෆැක්ස් :- 011-2337777

செயலகம்
உள்நாட்டு இறைவரிக் கட்டிடம்
சேர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை
த.பெ.இல. 515, கொழும்பு 02
இலங்கை
தொலைபேசி :- 011-2334400/011-2135400
பக்ஸ் :- 011-2337777

Secretariat
Inland Revenue Building
Sir Chittampalam A Gardiner Mawatha
P.O. 515, Colombo 02
Sri Lanka
Telephone :- 011-2334400/011-2135400
Fax :- 011-2337777
E-Mail : cgir@ird.gov.lk Web: www.ird.gov.lk


**SEC/2022/E/05** **22.12.2022**

**ஊழிய வருமானத்தை கணிப்பதில் காசற்ற நன்மைகளுக்கு பெறுமதிகளை அளவீடு செய்தல்**

2022/2023 ஆம் வரிமதிப்பீட்டாண்டின் இரண்டாம் மூன்று மாத காலப்பகுதிக்கு ஓர் ஊழியரின் ஊழியத்திலிருந்தான ஈட்டுகைகள் மற்றும் இலாபங்களை கணிப்பதில், ஊழியத்திலிருந்தான அத்தகைய ஊழியரினால் பெறப்பட்ட அல்லது ஈட்டப்பட்ட காசற்ற நன்மைகள், 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் பிரகாரம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் கீழே குறித்துரைக்கப்பட்டுள்ளது

1. தொழில்வழங்குநரினால் வழங்கப்பட்ட கம்பனி பங்குகளின் பெறுமதி

   எவரேனும் ஊழியர் ஒருவருக்கு ஏதேனும் பங்கினை பங்கீடு செய்வதிலிருந்து அல்லது ஏதேனும் பங்குகளைக் கொள்வதற்கான விருப்பு தெரிவொன்றிலிருந்து அத்தகைய ஊழியருக்கு ஓர் தொழில்வழங்குநரின் ஒன்றுதிரட்டப்பட்ட ஏதேனும் நன்மைகளின் "பெறுமதி" என்பது பங்குகளுக்காக ஊழியரின் உதவுத் தொகையினால் குறைக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் இருப்பின், மேலதிக, ஊழியர் பங்குதிட்டமொன்றின் கீழ் அந்நேரத்தில் பங்கீடு செய்யப்பட்ட பங்குகளின் சந்தைப்பெறுமதி எனப் பொருள்படும்.

2. தொழில்வழங்குநரினால் வழங்கப்பட்ட ஏதேனும் வதிவிட நன்மைகளின் பெறுமதி

   (i) ஏற்புடைய சந்தர்ப்பங்களில், தொழில்வழங்குநரினால் வழங்கப்பட்ட ஏதேனும் வதிவிடத்தின் ஏதேனும் நன்மையின் பெறுமதியானது, சந்தைப் பெறுமானமாக அல்லது சந்தைப் பெறுமானம் பெற்றுக்கொள்ளமுடியாவிடின் கீழே குறிப்பிடப்பட்ட பெறுமதியாக இருத்தல் வேண்டும்.

| மாதாந்த ஊதியம் (ரூபாய்) | மாதாந்த காசற்ற நன்மை (ரூபாய்) | | |
|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட பிரதேசத்தில் | மதிப்பிடப்படாத பிரதேசத்தில் | தோட்ட பங்களாக்கள் |
| 200,000 இற்கு சமம் அல்லது அதனை விட குறைவு எனில் | 20,000 அல்லது ஊதியத்தின் 12.5% இவற்றுள் குறைவானது | 15,000 அல்லது ஊதியத்தின் 10 % இவற்றுள் குறைவானது | 10,000 அல்லது ஊதியத்தின் 7.5% இவற்றுள் குறைவானது |
| 200,000 இனை விட கூடுதல் எனில் | 40,000 அல்லது ஊதியத்தின் 12.5% இவற்றுள் குறைவானது | 30,000 அல்லது ஊதியத்தின் 10 % இவற்றுள் குறைவானது | 20,000 அல்லது ஊதியத்தின் 7.5% இவற்றுள் குறைவானது |
| அந்த வதிவிடம் தளபாடங்களுடன் காணப்படின் | ஊதியத்தின் 2.5% அல்லது 5,000 இவற்றுள் குறைவானது | | |

எந்தவொரு வதிவிடத்தின் பெறுமதியானது, எவரேனும் காவலர், வீட்டுப் பணிப்பெண்கள், வேலைக்காரர்கள், சலவை போன்றவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

*குறிப்பு:* ஏதேனும் நன்மையின் பெறுமதியானது நியாயமான சந்தைப்பெறுமதியைவிட குறைவு எனில், ஊழியர் ஒருவரின் ஊழிய வருமானத்தின் மீதான பிடித்துவைத்தல் வரியின் தேவைப்பாட்டிற்காக கருத்தில் கொள்ளப்பட்ட நன்மை மற்றும் நியாயமான சந்தைப் பெறுமதி என்பவற்றிற்கு இடையிலான வித்தியாசமானது, சட்டத்தின் 10 ஆம் பிரிவின் தேவைப்பாட்டிற்காக வீட்டு செலவினமாக (Domestic expense) அனுமதிக்கப்படாதிருத்தல் வேண்டும்.

(ii) ஊழியர் குடியிருக்கும் வீடு அல்லது தொடர்மனையுடன் தொடர்புடைய ஏதேனும் செலவினங்களை தொழில்வழங்குநர் மீளளிப்பாராயின், நன்மையின் பெறுமதியானது, தொழில்வழங்குநரினால் மீளளிக்கப்பட்ட உண்மையான செலவினமாக இருத்தல் வேண்டும்.

3. *தொழில்வழங்குரினால் வழங்கப்பட்ட போக்குவரத்து வசதிகளின் பெறுமதி*

(i) ஏதேனும் மோட்டார் வாகனத்தின் தனிப்பட்ட பயன்பாட்டில் (முழுவதுமாக அல்லது பகுதியளவில்) இருந்தான ஊழியர் ஒருவரின் நன்மையின் பெறுமதியானது, சந்தைப்பெறுமானமாக அல்லது சந்தைப்பெறுமானம் பெறமுடியாதவிடத்து கீழே குறிப்பிட்ட பெறுமதியாக இருத்தல் வேண்டும்.

| **இயந்திரம்** | **காசற்ற நன்மை (மாதம் ஒன்றுக்கு ரூபாய்)** | | |
|---|---|---|---|
| | **வாகனம்** | **சாரதி** | **எரிபொருள்** |
| • 1800cc இற்கு மேற்படாத – எரிபொருள் அல்லது ஹைபிரிட் (பெற்றோல் /டீசல்)<br>• 200 KW இற்கு மேற்படாத மின்சார வாகனங்கள் | 20,000 | 10,000 | 20,000 |
| • 1800 cc இற்கு மேற்பட்ட – எரிபொருள் அல்லது ஹைபிரிட் (பெற்றோல்/டீசல்) )<br>• 200 KW இற்கு மேற்பட்ட மின்சார வாகனங்கள் | 35,000 | 10,000 | 30,000 |

ஊழியர் ஒருவருக்கு உத்தியோகபூர்வ அல்லது தனிப்பட்ட பாவனைக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வாகனங்கள் வழங்கப்பட்டிருப்பின், தனிப்பட்ட பாவனைக்கு மற்றும் முற்பண தனிநபர் வருமான வரித் தேவைபாட்டிற்கு ஊழியத்திலிருந்தான நன்மையாக ஒரு வாகனம் மட்டுமே கருத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்.

*குறிப்பு:* ஏதேனும் நன்மையின் பெறுமதியானது நியாயமான சந்தைப்பெறுமதியைவிட குறைவு எனில், ஊழியர் ஒருவரின் ஊழிய வருமானத்தின் மீதான பிடித்துவைத்தல் வரியின் தேவைப்பாட்டிற்காக கருத்தில் கொள்ளப்பட்ட நன்மை மற்றும் நியாயமான சந்தைப் பெறுமதி என்பவற்றிற்கு இடையிலான வித்தியாசமானது, சட்டத்தின் 10 ஆம் பிரிவின் தேவைப்பாட்டிற்காக வீட்டு செலவினமாக (Domestic expense) அனுமதிக்கப்படாதிருத்தல் வேண்டும்.

(ii) ஏதேனும் மோட்டார் சைக்கிளின் தனிப்பட்ட பயன்பாட்டில் (முழுவதுமாக அல்லது பகுதியளவில்) இருந்தான ஊழியர் ஒருவரின் நன்மையின் பெறுமதியானது –

(அ) தொழில்வழங்குநரின் கணக்கில் தொழில்வழங்குநரினால் எரிபொருள் வழங்கப்பட்டிருப்பின், (இயந்திரத்தின் வினைத்திறனை பொருட்படுத்தாது) மாதம் ஒன்றுக்கு ரூபா 5,000 ஆக இருத்தல் வேண்டும்;

(ஆ) தொழில்வழங்குநரினால் எரிபொருள் வழங்கப்படாதிருப்பின், (இயந்திரத்தின் வினைத்திறனை பொருட்படுத்தாது) மாதம் ஒன்றுக்கு ரூபா 3,000 ஆக இருத்தல் வேண்டும்

(iii) கீழ்வருவனவற்றின் தனிப்பட்ட பாவனைக்கான நன்மையின் பெறுமதி –

(அ) தொழில்வழங்குநரினால் வழங்கப்பட்டு, கள வேலைகளுக்காக பயன்படுத்தும் ஏதேனும் மோட்டார் வாகனம் பயன்படுத்துமிடத்து, தொழில்வழங்குநரினால் அப்பாவனைக்குரிய சரியான பதிவுகள் பராமரிக்கப்படின், (இயந்திரத்தின் வினைத்திறனை பொருட்படுத்தாது) ஒரு கிலோ மீற்றருக்கு ரூபாய் 25 ஆக கொள்ளப்படுதல் வேண்டும்;

(ஆ) தொழில்வழங்குநரினால் வழங்கப்பட்டு, கள வேலைகளுக்காக பயன்படுத்தும் ஏதேனும் மோட்டார்சைக்கிள் பயன்படுத்துமிடத்து, தொழில்வழங்குநரினால் அப்பாவனைக்குரிய சரியான பதிவுகள்

பராமரிக்கப்படின், (இயந்திரத்தின் வினைத்திறனை பொருட்படுத்தாது) ஒரு கிலோ மீற்றருக்கு ரூபாய் 5 ஆக கொள்ளப்படுதல் வேண்டும்;

(iv) ஊழியரிற்கு சொந்தமான ஏதேனும் மோட்டார் வாகனம் அல்லது மோட்டார்சைக்கிளின் எரிபொருள் அல்லது பராமரிப்பு தொடர்பில் ஏதேனும் செலவினங்கள் தொழில்வழங்குநரினால் உறப்பட்டால் அல்லது மீளளிக்கப்பட்டால், ஊழியரின் நன்மையின் பெறுமதியானது உண்மையான செலவினமாக காணப்படும்.

4. *தொழில்வழங்குநரினால் வழங்கப்பட்ட ஏனைய நன்மைகள்*

| | **நன்மையின் தன்மை** | **நன்மையின் பெறுமதி** |
|---|---|---|
| 1 | வெளிநாட்டு ஊழியருக்கு ஹோட்டல் வசதிகளுக்கான ஏற்பாடு | செலவினத்தின் 100% |
| 2 | சலுகை வீதங்களில் கடன்கள் | சலுகை வீதத்திற்கும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் வருடாந்தம் குறிப்பிடப்படும் சந்தை வீதத்திற்கும் இடையிலான வேறுபாட்டின் 50%<br>2022/2023 வரி மதிப்பீட்டாண்டின் இரண்டாம் மூன்று-மாத காலப்பகுதிக்கு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் குறிப்பிடப்பட்ட சந்தை வீதம் வருடாந்தத்தின் 9.08% |
| 3 | வேலைக்காரர் போன்றோரிற்கான ஏற்பாடு | செலவினத்தின் 100% |
| 4 | மின்சாரம் மற்றும் எரிவாயு போன்றவற்றிற்கான ஏற்பாடு | செலவினத்தின் 100% |
| 5 | மருத்துவ நன்மைகளின் ஏற்பாடு | அத்தகைய மருத்துவ சிட்டையின் 100%. |
| 6 | இலவச உணவிற்கான ஏற்பாடு | செலவினத்தின் 100% |
| 7 | பல்மருத்துவ, மருத்துவ அல்லது சுகாதார காப்புறுதி கொடுப்பனவு<br>ஒரே நிபந்தனைகளிலுள்ள அனைத்து முழு – நேர ஊழியர்களுக்கு இல்லாத நன்மைகளான பல்மருத்துவ, மருத்துவ அல்லது சுகாதார காப்புறுதியின் செலவினங்களை கொடுத்துதீர்த்தல் அல்லது மீளளித்தல் | செலவினத்தின் 100% |
| 8 | தொலைபேசி கட்டணங்கள் & வருடாந்த கட்டணங்களின் செலுத்துகை | செலவினத்தின் 50% |
| 9 | விமான டிக்கெட்டுகள்<br>(உத்தியோகபூர்வ தேவைப்பாடுகள் தவிர்ந்தவை) | செலவினத்தின் 100% |
| 10 | வரிக் கொடுப்பனவு | செலுத்தப்பட்ட வரியின் தொகை |

**உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்**

D.R.S. Hapuarachchi
Commissioner General of Inland Revenue
Inland Revenue Department
Sri Chittampalam A. Gardiner Mawata
Colombo 02